**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்</u>**

**<u>மடத்துக்குளம்</u>**

முன்னிலை: திரு.**R. பாக்கியராஜ், BA., B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்.

2021ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 01 ஆம் நாள் புதன் கிழமை

(திருவள்ளுவராண்டு ஸ்ரீ பிலவ வருடம் ஆவணி மாதம் 16 ஆம் நாள்)

**<u>அசல் வழக்கு எண். 125/2019</u>**

<u>CNR NO.TNTI220001102019</u>

திலகவதி ..**வாதி**

.. **எதிர்**..

1.சக்திவேல்

2.வெள்ளைச்சாமி செட்டியார் ..**பிரதிவாதிகள்**

இவ்வழக்கானது தாவா வரைபடத்தில் சிகப்பு நிறத்தில் காட்டப்பட்டுள்ள தென்வடல் மதில் சுவரை பிரதிவாதிகள் இடித்து அப்புறப்படுத்திக் கொள்ளும்படி பிரதிவாதிகள் மீது ஒரு செயலுறுத்துக்கட்டளை பிறப்பிக்கும்படிக்கும் , பிரதிவாதிகளோ அவர்களது ஆட்களோ தாவா வரைபடத்தில் நீல நிறத்தில் காட்டப்பட்டுள்ள , பொது இடத்தின் வழியாக வாதி சென்று , தாவா வீட்டின் மேபுற சுவரை வெள்ளையடித்து பராமரிப்பு செய்து அமைதியான முறையில் அனுபவித்துக் கொள்வதை தடுத்து இடையூறுகள் கொடுக்க கூடாது என பிரதிவாதிகள் மீது ஒரு நிரந்தர உறுத்துக் கட்டளை பிறப்பிக்கும்படிக்கும், இந்த வழக்கின் செலவு தொகையும் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்திரு .சி.சிதம்பரசாமி, பி.ஏ., பி.எல்., அவர்கள் ஆஜராகியும் , பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எஸ்.சிவக்குமார், எம்.ஏ., பி.எல்., அவர்கள் ஆஜராகியும் பின்னிட்டு வாதி தரப்பில் வழக்கு விசாரணைக்கு ஆஜரின்மையால் இன்று இந்நீதிமன்றம் பின்வருமாறு வழங்கிடும்

**<u>தீர்ப்புரை</u>**

Plaintiff is called absent. Today posted for trial (NFA). Suit is dismissed for default. No cost.

2021 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 01 ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒப்பம்/–திரு.ஆர்.பாக்கியராஜ், பி.ஏ., பி.எல்.,
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர்**
**மடத்துக்குளம்.**

**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்</u>**

**<u>மடத்துக்குளம்</u>**

முன்னிலை: திரு.**R. பாக்கியராஜ், BA., B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்.

2021ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 01 ஆம் நாள் புதன் கிழமை
(திருவள்ளுவராண்டு ஸ்ரீ பிலவ வருடம் ஆவணி மாதம் 16 ஆம் நாள்)

**<u>அசல் வழக்கு எண். 125/2019</u>**

**<u>CNR NO.TNTI220001102019</u>**

திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், ஜோத்தம்பட்டி கிராமம், ஸ்ரீராம பட்டிணம், கதவு எண்.724 ல் வசிக்கும் செல்லமுத்து மனைவி சுமார் 45 வயதுள்ள திலகவதி **..வாதி**

**.. எதிர்..**

1. திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், ஜோத்தம்பட்டி கிராமம், ஸ்ரீராம பட்டிணம், பழனிக்கவுண்டன் வீதி, கதவு எண்.633 ல் வசிக்கும் வெள்ளைச்சாமி செட்டியார் மகன் சுமார் 40 வயதுள்ள சக்திவேல்

2.திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், ஜோத்தம்பட்டி கிராமம், ஸ்ரீராம பட்டிணம், பழனிக்கவுண்டன் வீதி, கதவு எண்.633 ல் வசிக்கும் கிருஷ்ணசாமி செட்டியார் மகன் சுமார் 65 வயதுள்ள வெள்ளைச்சாமி செட்டியார்

**..பிரதிவாதிகள்**

இவ்வழக்கானது தாவா வரைபடத்தில் சிகப்பு நிறத்தில் காட்டப்பட்டுள்ள தென்வடல் மதில் சுவரை பிரதிவாதிகள் இடித்து அப்புறப்படுத்திக் கொள்ளும்படி பிரதிவாதிகள் மீது ஒரு செயலுறுத்துக்கட்டளை பிறப்பிக்கும்படிக்கும், பிரதிவாதிகளோ அவர்களது ஆட்களோ தாவா வரைபடத்தில் நீல நிறத்தில் காட்டப்பட்டுள்ள, பொது இடத்தின் வழியாக வாதி சென்று, தாவா வீட்டின் மேபுற சுவரை வெள்ளையடித்து பராமரிப்பு செய்து அமைதியான முறையில் அனுபவித்துக் கொள்வதை தடுத்து இடையூறுகள் கொடுக்க கூடாது என பிரதிவாதிகள் மீது ஒரு நிரந்தர உறுத்துக் கட்டளை பிறப்பிக்கும்படிக்கும், இந்த வழக்கின் செலவு தொகையும் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>தாவா தாக்கலான நாள்</u>** <u>07.01.2015</u>

**<u>வழக்கு மூலம்</u>** 01.11.2000 ம் தேதியில் மடத்துக்குளம் வட்டம், ஜோத்தம்பட்டி கிராமத்தில் வழக்குமூலம் உண்டாகி உள்ளது.

**<u>தாவா மதிப்பு</u>** ரூ.2,000/– அதற்கு தமிழ்நாடு நீதிமன்ற முத்திரைக் கட்டணம் சட்டம் பிரிவு 27(சி)ன் கீழ் ரூ. 151 /–செலுத்தப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்திரு .சி.சிதம்பரசாமி, பி.ஏ., பி.எல்., அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்

திரு.எஸ்.சிவக்குமார், எம்.ஏ., பி.எல்., அவர்கள் ஆஜராகியும் பின்னிட்டு வாதி தரப்பில் வழக்கு விசாரணைக்கு ஆஜரின்மையால் இன்று இந்நீதிமன்றம் பின்வருமாறு வழங்கிடும்

**<u>தீர்ப்பாணை</u>**

1. Suit is dismissed for default.
2. No cost.

**<u>சொத்து விவரம்</u>**

திருப்பூர் பதிவு மாவட்டம், கணியூர் சார் பதிவு வட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், ( தற்போது மடத்துக்குளம் வட்டம் ) ஜோத்தம்பட்டி கிராமம் புலத்தில் 199/3 நெ. காலையில் எங்களுக்கு பாத்தியப்பட்டதும் நாங்கள் தங்களுக்கு கிரையத்திற்கு கொடுக்கும் பழைய கதவு எண். 4/128, புதிய கதவு எண். 724 இவைகளில் ஓர் பகுதியான வீடு இடம் வகையறாவுக்கு செக்குபந்தியும் அளவுகளும்,

தாக்கு 1,

முத்துச்சாமி கவுண்டர் சொத்துக்கும் - வடக்கும், கிழக்கும்
மடத்துக்குளம் காரத்தொழுவு ரோட்டுக்கும் - மேற்கு
கீழ்க்காணும் 2வது தாக்கு பாதைக்கும்
எங்களில் 2 நபரிடம் கிரையம் பெற்ற
சக்திவேல் கிரைய சொத்திற்கும் - தெற்கு
இதன் மத்தியில் மேபுறம் தென்வடல் அடி 55'0",
கிழபுறம் தென்வடல் அடி 64'0"
வடபுறம கிழமேல அடி 151'0"
தென்புறம் கிழமேல் அடி 153'0"

இந்த அளவுகளுக்கு 9044 சதுரடி பரப்புள்ள இடமும் மேற்படி இடத்தில கிழக்கு வாசல் வைத்து 35 ச.மீ. அளவில் கட்டப்பட்டுள்ள ஓட்டு வில்லை வீடும், அதை சேர்ந்த கதவு நிலவு கட்டுக்கோப்பும் மேற்படி வீட்டிற்கு ஸ்ரீராமபட்டிணம் மின் இணைப்பு 252ன்படி உள்ள மின் இணைப்பும், அதை சேர்ந்த மின் சார உபகரணங்களும் அதன் டெபாசிட் துகையும் மேற்படி வீட்டிற்குண்டான மாமூல் பாத்தியங்களும்,

பின்னும் தாக்கு 2

மேற்படி 1வது தாக்குக்கும் - வடக்கு

எங்களில் 2 நபரிடம் ஏற்கனவே கிரையம் பெற்ற

சக்திவேல் கிரைய சொத்திற்கும் -தெற்கும்,கிழக்கும்,

மடத்துக்குளம் காரததகொழுவு ரோட்டுக்கும் - மேற்கு

இதன் மத்தியில் இருபுறம் தென்வடல் அடி 10’0”

இருபுறமும் கிழமேல் அடி 60’0”

இந்த அளவுக்கு 600 சதுரடி பரப்புள்ள இடத்தில் பொதுவில் சரிபாதியும் மேற்படி இடத்தின் வழியாக மாமூல்படி பொதுவாக போக்குவரத்து செய்துகொள்ளும் பாத்தியங்களும், மேற்படி வீட்டிற்கும் மேற்படி இடத்திற்கும் மாமூல்படி பொதுவாக போக்குவரத்துசெய்துகொள்ளும் பாத்தியங்களும் சகிதம். வார்டு எண். 4 கதவு எண். 128 புதிய கதவு எண். 7. மேற்படி வீட்டின் மேபுற சுவரை வெள்ளையடித்து பராமரிப்புகள் செய்ய விடப்பட்டுள்ள 3 அடி அகல பொது இடமும், அதன்வழியாக சென்று வாதி மேபுற சுவரை வெள்ளையடித்து பராமரிப்பு செய்து கொள்ளும் தட பாத்தியம் சகிதம். மேற்படி தடம் தாவா வரைபடத்தில் நீல நிறத்தில் காட்டப்பட்டுள்ளது.

2021ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 01 ஆம் நாளாகிய இன்று கையொப்பமும் நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

ஒப்பம்/—திரு.ஆர்.பாக்கியராஜ், பி.ஏ., பி.எல்.,

**மாவட்ட உரிமையியல்**

**மற்றும் நீதித்துறை நடுவர்**

**மடத்துக்குளம்.**